வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 20.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நக்சலைட்டுகள் இல்லாத நாடாக, இந்தியா மேம்படும் என, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மத்திய அறிவியல் – தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில், அறக் கொடையாளரும், மைக்ரோ சாப்ட் இணை நிறுவனருமான, பில்கேட்சை சந்தித்து பேசினார்.

புதுச்சேரி அரசின் கல்வித் துறையில், ரொட்டி-பால் திட்ட ஊழியர்களின் ஊதியத்தை, 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் ஆணையை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று ஊழியர்களுக்கு வழங்கினார்.

லிங்காரெட்டிப் பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை இந்த ஆண்டே மீண்டும் திறக்க, முயற்சிகள் எடுக்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

----------------------------

*சத்தீஸ்கர் மாவோயிஸ்ட் (15)*

நக்சலைட்டுகளுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நக்சலைட்டுகள் இல்லாத நாடாக இந்தியா மேம்படும் என்றும், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். சத்தீஸ்கர் மாநிலம் பீஜாப்பூர் மற்றும் காங்கர் மாவட்ட வனப் பகுதிகளில், இன்று

மாவோயிஸ்டுகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட 2 மோதல்களில், மொத்தம் 22 மாவேயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து, சமூக ஊடகப் பதிவு அவர் வெளியிட்டுள்ள பதிவில், நக்சலைட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில், இது இன்னொரு பெரிய வெற்றி என்றும், கூறியுள்ளார். இதற்கிடையே, சத்தீஸ்கர் மோதல்களில் சுட்டுக் கொல்லப்பட்ட மாவோயிஸ்டுகளின் எண்ணிக்கை, 30 ஆக அதிகரித்து இருப்பதாக, கடைசியாக தகவல் வெளியாகி உள்ளது. மாவோயிஸ்டுகளுக்கு எதிரான பீஜாப்பூர் மோதலில், மாவட்ட ரிசர்வ் போலீஸ் குழுவைச் சேர்ந்த ஜவான் ஒருவரும் உயிர்த் தியாகம் செய்ய நேர்ந்ததாக, பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-----------------------------

மோடி-வாழ்த்து (9)

பார்சி மக்களின் நவ்ரோஸ் புத்தாண்டு விழா, இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அனைவருக்கும் மகிழ்ச்சி, வளம் மற்றும் நல்ல ஆரோக்கியத்தை அள்ளி வழங்கும் சிறப்பான நாள், நவ்ரோஸ் என்றும், இந்நாளில் தொடங்கும் புதிய ஆண்டு, வெற்றி மற்றும் முன்னேற்றத்தை குறிப்பதாக அமைந்து, மக்களிடையே நல்லிணக்கத்தை வலுப்படுத்தட்டும் என்று, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் கூறியுள்ளார். மும்பை மற்றும் புறநகர் பகுதிகளில், பார்சி இன மக்கள், பாரம்பரிய ஆடை அணிந்தும், அக்னி ஆலயத்தில் வழிபட்டும் இந்நாளை கொண்டாடினர்.

-----------------------------

சிட்டுக் குருவி தினம் (11)

சிட்டுக் குருவி இனம் வேகமாக அழிந்து வருவதை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான உலக சிட்டுக் குருவிகள் தினம், இன்று கடைபிடிக்கப் படுகிறது. தாவரங்களின் மகரந்தச் சேர்க்கையிலும் பூச்சி வகைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதிலும் முக்கிய

பங்காற்றும் சிட்டுக் குருவிகளின் வாழ்விடங்கள், நகரமயம், மற்றும், மாசுபாட்டினால் மறைந்து வருவதை தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து இந்நாளில் வலியுறுத்தப் படுகிறது. பசுமைப் பரப்பை அதிகரித்தல், ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம், சிட்டுக் குருவி போன்ற சிறு பறவை இனங்களை பாதுகாப்பதுடன், ஆரோக்கியமான சுற்றுச் சூழலை உருவாக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*மகிழ்ச்சி தினம்* (11)

ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டிதன் அவசியத்தை வலியுறுத்தும், **சர்வதேச உவகை தினம், பரஸ்பர பகிர்வு மற்றும் அக்கறை மூலம் மகிழ்ச்சி** என்ற கருப்பொருள் அடிப்படையில், உலகம் முழுவதும் இன்று, கடைபிடிக்கப்படுகிறது. மனித வாழ்க்கையில், மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தையும், நீடித்த வளர்ச்சி, வறுமை ஒழிப்பு உட்பட, மக்களுக்கான அரசின் கொள்கைகளில், மகிழ்ச்சிக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் வகையிலான இந்நாளில், இதே கருத்துகள் தொடர்பாக, **உலக உவகை அறிக்கை-2005** என்னும் ஆவணம் ஒன்றை, ஐ.நா மன்றம் வெளியிட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு ஐநா பொதுப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், மார்ச் 20ஆம் தேதி, **உலக உவகை** தினமாக அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*மனநலம்* (9)

ராணுவ வீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சிறப்பு மனநலத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஒத்துழைப்பது குறித்து, முப்படைகளுக்கு இடையிலான மருத்துவ சேவைகள் அமைப்பு, NIMHANS என்னும் தேசிய மனநலக் கழகத்துடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. முப்படைகளுக்கு இடையிலான மருத்துவ சேவைகள் அமைப்பின்

தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் ஆர்த்தி சரின், NIMHANS இயக்குநர் டாக்டர் பிரத்திமா மூர்த்தி ஆகியோர், புதுடெல்லியில் இன்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

-----------------------------

சந்திப்பு (9)

மத்திய அறிவியல் – தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில், அறக்கொடையாளரும், மைக்ரோ சாப்ட் இணை நிறுவனருமான, பில்கேட்சை சந்தித்து பேசினார். உயிரி உற்பத்தி உட்பட, இந்தியாவின் புதுமையாக்கத் துறைகளில், தனியார் துறை மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் பங்கேற்பை விரிவாக்கம் செய்வது குறித்து இந்த சந்திப்பின் போது முக்கியமாக விவாதிக்கப்பட்டது. புதிய தடுப்பூசிகளை உருவாக்குவதில், இந்தியா முன்னிலையில் இருப்பதை பில்கேட்ஸ் பாராட்டினார். காசநோய், மலேரியா போன்ற நோய்களை ஒழிப்பதில், இந்தியாவின் முயற்சிகளை ஆதரிக்க, அவர் ஆர்வம் வெளியிட்டார்.

-----------------------------

ரொட்டி-பால் (13)

புதுச்சேரி அரசின் கல்வித் துறையில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வரும் ரொட்டி-பால் திட்ட ஊழியர்களின் ஊதியத்தை, மாதம் 10 ஆயிரம் ரூபாயில் இருந்து, 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பின்படி, இதற்கான ஆணையை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கல்யாண சுந்தரம், திரு. கே.எஸ்.பி ரமேஷ், திரு. கொல்லபள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக், மற்றும் உயர்நிலை அதிகாரிகள் இதில் கலந்து கலந்து கொண்டனர். ஊதிய உயர்வு வழங்கிய முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சருக்கு, ரொட்டி-

பால் திட்ட ஊழியர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். பின்னர் கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் செய்தியாளர்களிடம் பேசுகையில்....

----------------------------

*சட்டமன்றம் (16)*

புதுச்சேரியில் மூடப்பட்ட நிலையில் உள்ள லிங்காரெட்டிப் பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை, மீண்டும் செயல்படுத்த, அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் மூலம், அறிக்கை பெறப் பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டே ஆலையை திறக்க, முயற்சிகள் எடுக்கப்படும் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். ஆலை மூடப்பட்டுள்ளதால், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி இருப்பதாக, இன்று சட்டப் பேரவையில், நியமன உறுப்பினர் திரு. அசோக் பாபு உட்பட பல்வேறு உறுப்பினர்கள், கேள்வி நேரத்தில் கூறியபோது முதலமைச்சர் இவ்வாறு பதில் அளித்தார். மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் மற்றொரு கேள்விக்கு பதில் அளிக்கையில், சுதேசி, பாரதி மற்றும் ரோடியர் பஞ்சாலைப் பகுதிகளை எப்படி பயன்படுத்தலாம் என்பது குறித்து, ஜவுளி ஆராய்ச்சிக் கழக அறிக்கையின் படி நடவடிக்கை எடுக்குமாறு துணை நிலை ஆளுநர் கூறியிருப்பதாகவும், இந்த அறிக்கை விரைவில் கிடைக்கும் என்றும் கூறினார். சம்பந்தப்பட்ட இடங்களில், ஏக்தா மால், ஜவுளிப் பூங்கா, மற்றும் ஐடி பார்க் அமைக்க, அரசு எண்ணி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

----------------------------

*சட்டப் பேரவை மாணவர்கள் (12)*

புதுச்சேரியில் இன்று சட்டப் பேரவை நிகழ்வுகளை, காரைக்கால் மாணவர்கள் 54 பேர், சட்டப் பேரவையின் பார்வையாளர் அரங்கில் இருந்து சுமார் அரை மணி நேரம் பார்வையிட்டனர். காரைக்கால் நிரவி பகுதியில் உள்ள, பாரதிதாசன் அரசு நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த இம்மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, பேரவையில், சபாநாயகர் உட்பட உறுப்பினர்கள் சார்பில், வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மாணவர்கள், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை சந்தித்த போது, முதலமைச்சர், நோட்டுப் புத்தகம் மற்றும் கல்வி உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கி, நன்றாக படித்து, வாழ்வில் முன்னேற வாழ்த்தினார். சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. ஜெயகுமார், திரு. திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு. நாக தியாகராஜன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

----------------------------

*கலை-பண்பாடு* (7)

புதுச்சேரியில் கலை-பண்பாட்டுத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 6 நாள் இசை-நாட்டிய விழா, மற்றும், சிறார் இசை-நாட்டிய விழா, நாளை தொடங்க உள்ளது. கடற்கரை சாலையில், அம்பேத்கர் மணிமண்டபம் எதிரே, நாளை மாலை நடைபெறும் தொடக்க விழாவிற்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் தலைமையேற்கிறார். கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பி.ஆர். என் திருமுருகன் மற்றும் அதிகாரிகள் தொடக்க விழாவில் பங்கேற்க உள்ளனர்.

----------------------------

*ஏனாம்* (9)

ஏனாமில், கனக்காலபேட்டா பகுதியில் உள்ள குப்பை கிடங்கில், குப்பைகளைக் கொட்டக் கூடாது என அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து, மாற்று இடம் தேர்ந்தெடுக்கப் படாமல், நகரப் பகுதியில் துப்புரவு நிலவரம் மோசமாகி வருவதை, அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில், அஇஅதிமுக-வின் ஏனாம் பிரிவினர், ஏனாமில் நாளை, அமைதி வழிக் கடையடைப்பு போராட்டம் அறிவித்துள்ளனர். என்.ஆர் காங்கிரஸ் கட்சியின் ஏனாம் பிரிவுத் தலைவர் திரு. மல்லாடி சாமுவேல் உள்ளிட்டவர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து இருப்பதாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

----------------------------

*கேலோ இண்டியா (9)*

2ஆவது கேலோ இண்டியா பாரா விளையாட்டுப் போட்டிகளை, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, புதுடெல்லியில், இன்று தொடக்கி வைத்தார். போட்டிகளில், பாரா கால்பந்து அல்லாத 6 விளையாட்டுப் பிரிவுகளில், நாடெங்கிலும் இருந்து, சுமார் ஆயிரத்து 300 பாரா விளையாட்டு வீரர்கள், பங்கேற்கிறார்கள். 2028ஆம் ஆண்டு, லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற உள்ள, கோடைக்கால பாராலிம்பிக்ஸ் போட்டிகளில், இந்தியாவின் பங்கேற்புக்கான அடித்தளமாக, கேலோ இண்டியா பாரா விளையாட்டுப் போட்டிகள் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*பாலிடெக்னிக்-விளையாட்டு (10)*

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில அளவிலான, பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இன்று தொடங்கி உள்ளன. பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டு சங்கத்தின் தலைவரும், வலங்கைமான் அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வருமான திரு. ஜான் லூயிஸ் தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில், அண்ணாமலை பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் பிரகாஷ், இந்த 3 நாள் விளையாட்டுப் போட்டிகளை தொடக்கி வைத்தார். பல்கலைக்கழக உடற்பயிற்சித் துறையின் தலைவர் பேராசிரியர் ராஜசேகரன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------------

*கிரிக்கெட் ரொக்கப் பரிசு (7)*

ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம், 58 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு அறிவித்துள்ளது. ரோஹித் ஷர்மா தலைமையிலான இந்திய அணி, ஐசிசி சேம்பியன்ஸ் கோப்பைத் தொடரில், கடைசி வரை எந்த

போட்டியிலும் தோற்காமல், கடந்த 9ஆம் தேதியில், துபாயில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், நியூலாந்து அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்து, கோப்பையை வென்றது.

----------------------------

ஐபிஎல் (16)

வரும் சனிக்கிழமை தொடங்கும் ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில், சென்னை-மும்பை அணிகளுக்கு இடையே, வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ள போட்டியில், மும்பை அணியின் தலைவராக, சூர்யகுமார் யாதவ் செயல்படுவார் என அணியின் நிர்வாகம் அறிவித்துள்ளது. மும்பை அணியின் வழக்கமான கேப்டன் ஹார்திக் பாண்டியா, ஒரு போட்டிக்கான தடை காரணமாகவும், ஜஸ்ப்ரீத் பும்ரா உடற்காயம் காரணமாகவும், இந்திய அணிக்கு எதிரான முதலாவது போட்டியில் பங்கேற்க இயலாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேபோல ராஜஸ்தான் அணியும், வரும் 23, 26, மற்றும், 30ஆம் தேதி, முறையே, ஹைதராபாத், கொல்கத்தா மற்றும் சென்னை அணிக்கு எதிரான, தனது முதல் 3 போட்டிகளுக்கு, ரியான் பராக்-கை, கேப்டனாக அறிவித்துள்ளது. சஞ்சு சாம்சன், முழு உடல் தகுதி பெற்ற பின்னர், ராஜஸ்தான் அணியின் தலைவராக மீண்டும் செயல்படுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. 18ஆவது ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில், நாளை மறுநாள் கொல்கத்தாவில் நடைபெற உள்ள முதலாவது போட்டியில், நடப்பு சாம்பியனான கொல்கத்தா அணி, பெங்களூரு அணியுடன் மோத உள்ளது.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நக்சலைட்டுகள் இல்லாத நாடாக, இந்தியா மேம்படும் என, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மத்திய அறிவியல் – தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில், அறக் கொடையாளரும், மைக்ரோ சாப்ட் இணை நிறுவனருமான, பில்கேட்சை சந்தித்து பேசினார்.

புதுச்சேரி அரசின் கல்வித் துறையில், ரொட்டி-பால் திட்ட ஊழியர்களின் ஊதியத்தை, 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் ஆணையை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று ஊழியர்களுக்கு வழங்கினார்.

லிங்காரெட்டிப் பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை இந்த ஆண்டே மீண்டும் திறக்க, முயற்சிகள் எடுக்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.